## ஈகை அமைப்புகளின் நிரல்கள் மற்றும் பிற இணையக் கருவிகள்

**www.cra.gc.ca/charitylists** என்னும் இணையத்தளம் சென்று, ஈகை அமைப்புகளின் நிரல்களைத் தேடிப்பார்க்கவும். அவற்றில் பின்வருவன உட்பட, பதிவுபெற்ற ஈகை அமைப்புகள் அனைத்தையும் பற்றிய தகவல்களைக் கண்டறியலாம்:

- உங்கள் சமூகத்தில் இயங்கும் ஈகை அமைப்புகள்;
- பதிவுத் திகதிகள்;
- நட்டஈடு;
- திட்டங்கள் மற்றும் பணிகள்; மற்றும்
- நிதி திரட்டல் மற்றும் நிருவாகச் செலவுகள்.

**www.cra.gc.ca/donors** என்னும் இணையத்தளம் சென்று, பின்வருவன உட்பட, புத்திசாலித்தனமாக நன்கொடை வழங்கும் விதம் சம்பந்தமான கருவிகளை அறிவதற்கு *ஈகை: நன்கொடை வழங்குவோர்க்கான தகவல் (Giving to charity: Information for donors / Faire un don de bienfaisance : renseignements à l'intention des donateurs)* என்னும் இணையப் பக்கங்களைப் பார்க்கவும்.

- ஈகை வரிக்கழிவு **கணக்கிடும் கருவி-calculator** (Charitable donation tax credit calculator / Calculateur du crédit d'impôt pour don de bienfaisance);
- *பதிவுபெற்ற ஈகை அமைப்புகளுக்கு நன்கொடை வழங்கல் 101 (Giving to registered charities 101)* என்னும் **(காணொலி) வீடியோ** தொடர்;
- மோசடி அறிகுறிகளைக் கண்டறிய உதவும் **வினாக்கள் மற்றும் எச்சரிக்கை அடையாளங்கள்**.

## CRA-யுடன் தொடர்பு கொள்ளவும்

**இணையம்**
www.cra.gc.ca/donors

**தொலைபேசி வாயிலாக**
1-800-267-2384

**அஞ்சல் வாயிலாக**
Charities Directorate
Canada Revenue Agency
Ottawa ON K1A 0L5

## நான் விரும்பும் ஈகை அமைப்புகள்

- பெயர்: ______________________
  பதிவிலக்கம்: ______________________
  நன்கொடை
  வழங்கிய திகதி: ______________________
  நன்கொடைத் தொகை: ______________________

- பெயர்: ______________________
  பதிவிலக்கம்: ______________________
  நன்கொடை
  வழங்கிய திகதி: ______________________
  நன்கொடைத் தொகை: ______________________

- பெயர்: ______________________
  பதிவிலக்கம்: ______________________
  நன்கொடை
  வழங்கிய திகதி: ______________________
  நன்கொடைத் தொகை: ______________________

# புத்திசாலித்தனமாக நன்கொடை வழங்கும் விதம்

### கனடா வருவாய் முகமை மற்றும் பதிவுபெற்ற ஈகை அமைப்புகள்







RC4407-TAM Rev. 11

Canada Revenue Agency   Agence du revenu du Canada

Canada

## கனடா வருவாய் முகமை மற்றும் பதிவுபெற்ற ஈகை அமைப்புகள்

**கனடாவில் 85,000-க்கு மேற்பட்ட பதிவுபெற்ற ஈகை அமைப்புகள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?**

கனடா வருவாய் முகமை (CRA) (Canada Revenue Agency (CRA) / Agence du revenue du Canada (ARC)):

- பதிவுத் தகுதி நிலை நாடும் விண்ணப்பங்களை மீள்நோக்குகிறது;
- ஓர் அமைப்பின் நோக்கங்களும் பணிகளும் ஈகை சார்ந்தவையா, பொது நன்மை அளிப்பவையா என்று தீர்மானிக்கிறது;
- பதிவு பெற்ற ஈகை அமைப்புகள் அனைத்தையும் பற்றிய தகவல்களையும், நிதிவிபரங்களையும் திரட்டி, அத்தகவல்களை கனடியர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்கிறது;
- பதிவுபெற்ற அமைப்புகள் தொடர்ந்து ஈகை நோக்குடன் இயங்கி, தமது வளங்களை ஈகைப் பணிகளுக்குப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக கணக்காய்வுகளை மேற்கொள்கிறது.

ஓர் ஈகை அமைப்பு பதிவுபெற்ற பின்னர், அது:

- ஒரு பதிவிலக்கத்தைப் பெற்றுக் கொள்கிறது;
- வருமான வரி நோக்கங்களுக்காக அதிகாரப்பூர்வமாக நன்கொடை பெறுகைச்சீட்டுகளை வழங்க முடிகிறது;
- வருமான வரி செலுத்த வேண்டியதில்லை;
- ஆண்டுதோறும் *பதிவுபெற்ற ஈகை அமைப்பு தகவல் திரட்டு (Registered Charity Information Return / Déclaration de renseignements des organismes de bienfaisance enregistrés)* ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## வரி உதவிக் குறிப்புகள்

- கனடியப் பதிவுகொண்ட ஈகை அமைப்புகள் அல்லது வேறு தகுதி வாய்ந்த கொடைபெறும் அமைப்புகள் மட்டுமே ஈகை வரிக் கழிவு பெறுவதற்குரிய நன்கொடை பெறுகைச்சீட்டுகளை அதிகாரப்பூர்வமாக வழங்கலாம்.
- ஓர் அமைப்பு பதிவுபெற்ற ஈகை அமைப்பா என்பதை, கனடா வருவாய் முகமையின் ஈகை அமைப்புகளின் நிரலில் தேடிப்பார்த்து அறியவும். அதற்கான இணையத்தளம்: **www.cra.gc.ca/charitylists** அல்லது தொலைபேசி இலக்கம்: **1-800-267-2384**.
- உங்கள் நன்கொடைக்கு வரிக் கழிவு கோருவதற்கு “வருமான வரி நோக்கங்களுக்கான அதிகாரப்பூர்வமான பெறுகைச்சீட்டு” என்னும் பற்றுச்சீட்டு உங்களிடம் இருக்க வேண்டும்.
- (நேரம், திறன், முயற்சி போன்ற) சேவைகள் வழங்கியமைக்கான நிதிகள் அதிகாரப்பூர்வமான நன்கொடை பெறுகைச்சீட்டுகள் **பெற தகுதியற்றவை**
- $200-க்கு மேற்பட்ட பொருத்தமான மொத்தத் தொகைக்கு உயர்ந்த வரிக் கழிவு பெறும் தகுதி உண்டு. நீங்கள் நன்கொடை வழங்கிய பின்னர் ஐந்து ஆண்டுகள் வரை அதனைக் கோரலாம். நீங்கள் பல ஆண்டுகளாக வழங்கிய நன்கொடைகளைச் சேர்த்து உங்கள் ஈகை வரிக் கழிவுகளைப் பெருக்க இது வழிவகுக்கிறது. உங்கள் பெறுகைச்சீட்டுகளை உங்கள் வாழ்க்கைத்துணையின் அல்லது கூடிவாழும் துணைவரின் பெறுகைச்சீட்டுகளுடன் சேர்க்கவும் முடியும்.
- உங்கள் விபரத்திரட்டுக்குரிய வரி ஆண்டில் டிசம்பர் 31-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கிய நன்கொடைகள் தொடர்பாக மட்டுமே கோரிக்கைகளை முன்வைக்கவும்.

## மோசடி தவிர்த்தல்

- நீங்கள் யாருக்கு நன்கொடை வழங்குகிறீர்கள் என்பதை உறுதிபட அறிந்து வைத்திருக்கவும். பெயர்போன, மதிப்புவாய்ந்த பதிவுபெற்ற ஈகை அமைப்புகளின் பெயர்கள் போன்றவையை மோசடி அமைப்புகள் சில வேளைகளில் பயன்படுத்துவதுண்டு. நீங்கள் நன்கொடை வழங்கும் முன்னர் சம்பந்தப்பட்ட ஈகை அமைப்பு பற்றி மேலதிக விபரம் அறிய அவகாசம் எடுக்கவும்.
- உங்கள் நன்கொடையை விஞ்சிய வரிக்கழிவு பெற்றுத்தருவதாக உங்களுக்கு வாக்குறுதி அளித்து, அப்படியாக பதிவுபெற்ற ஈகை அமைப்பு ஒன்றுக்கு நீங்கள் நன்கொடை வழங்கி “இலாபம்” ஈட்ட முன்வைக்கப்படும் சூழ்ச்சித் திட்டங்கள் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவும்.
- தனிநபர்களின் பெயரை விடுத்து, பதிவுபெற்ற ஈகை அமைப்புகளின் பெயரை இட்டே உங்கள் காசோலைகளை எழுதவும். உங்கள் இணைய வாயிலான கொடுப்பனவுகள் பத்திரமான முறையில் அமைவதை உறுதிப்படுத்தவும்.
- முறையற்ற விதத்தில் உடனடியாக நன்கொடை வழங்கும்படி நெருக்குதல் கொடுத்தாலோ, நீங்கள் வழங்கிய நன்கொடையை விஞ்சிய பெறுகைச்சீட்டு தர முன்வந்தாலோ, வேறு மோசடி அறிகுறிகள் தென்பட்டாலோ, நன்கொடை வழங்க மறுப்புத் தெரிவிக்கவும்.
- கனடிய மோசடி தடுப்பு மையத்துக்கு (Canadian Anti-Fraud Centre / Centre antifraude du Canada) மோசடி பற்றி அறிவிப்பதற்குப் பின்வரும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தவும்: **1-888-495-8501**.